DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 417/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சாந்தி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ரவிந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.12.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது முள்ளிமுனையில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் மீன் வியாபாரம் செய்து வருகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எங்கள உறவினரான தங்கராசு என்பவரின் மனைவியின் தாலிசெயினை யாரோ திருடிசென்றது சம்மந்தமாக அவர் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார். அப்போது எனது கணவரையும் துணைக்கு அழைத்துகொண்டு சென்றார். காவல் நிலையத்தில் தங்கராசிடம் அவருக்கு யார் மீதாவது சந்தேகம்

உள்ளதா என்று கேட்டதற்கு தங்கராசு 5 பேர் மீது சந்தேகம் உள்ளதாகவும் அதில் ஆஜர்எ திரியின் அண்ணன் மகன் மீதும் சந்தேகம் இருப்பதாக கூறியுள்ளார்.

2.இதனையடுத்து நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் ராம்நாடு சென்றுவிட்டு எங்கள் ஊருக்கு செல்வதற்காக போயிகொண்டு இருக்கும்போது முள்ளிமுனையில் பட்டாணி என்பவரது வீட்டிற்கு அருகே வரும்போது ஆஜர் எதிரி எங்களை வழிமறித்து பிடித்து கீழே தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு கை கால்களில் வீக்க காயம் ஏற்பட்டது. எனது கணவரை சட்டையை பிடித்து கிழித்து நகத்தல் எனது கணவரின் நெஞ்சில் கீறியதில் அவருக்கு காயம் ஏற்பட்டது. இன்னமும் காயத்தழும்பு உள்ளது. மேலும் எங்கள் இருவரையும் மிகவும் மோசமான கெட்டவார்த்தையால் திட்டினார். அவருடைய அண்ணன் மகனை சந்தேகத்தின் பேரில் தங்கராசு புகார் கொடுத்ததற்கு எனதுகணவர் உடன் சென்றதால் எங்களை அப்படி பேசினார்.

3. சண்டை நடக்கும்போது தங்கராசு மற்றும் குமார் ஆகியோர் அங்கு ,இருந்தார்கள்.இதை பார்த்து கொண்டிருந்த எனது தங்கை நதியா எங்களை தூக்கி விட்டார். சம்பவம் நடக்கும்போது மாலை சுமார் 5 மணி இருக்கும். அதன்பிறகு தொண்டி காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்துவிட்டு அதன்பிறகு திருவாடானை அரசு மருத்துவமனைக்கு சென்று வெளிநோயாளியாக காயத்திற்கு சிகிச்சை பெற்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது.**அந்த புகாரை எனது கணவர்எழுதினார். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.